ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்

தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

# திருவாராதநம்
# (தென்கலை)

இந்த முறை ஸ்ரீமாந் உ.வே. அரசாணிபாலை கந்தாடை க்ருஷ்ணமாசாரியர் ஸ்வாமிகளால் பரிசோதிக்கப்பட்டு, 1900–இல் அச்சடிக்கப்பட்டது. ஆங்காங்கு சில சொற்கள் எளிய தமிழுக்கு மாற்றப்பட்டுள்ளன.

## 1. திருக்காப்பு நீக்குதல்

திவ்யதேசத்து எம்பெருமானின் படம் அல்லது விக்ரஹம், திருவடி, அபயஹஸ்தம், ஆசார்யனின் திருவடி நிலைகள் ஆகியவற்றை எழுந்தருளப் பண்ணவேண்டும். இந்தப் பகவத் ஸந்திதி முன்பாக தெண்டன் ஸமர்ப்பித்து பின்வரும் இராமாயண ஸ்லோகத்தைக் கூறவேண்டும்:

கௌசல்யா ஸுப்ரஜா ராம பூர்வ ஸந்த்யா ப்ரவர்த்ததே
உத்திஷ்ட நரசார்த்தூல கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம்

என்னும் இராமாயண ஸ்லோகத்தை கூறவேண்டும். தொடர்ந்து கீழே உள்ள ஆசார்ய தனியன்களைக் கூற வேண்டும் .

மணவாள மாமுனிகள்

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்
யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்ய ஜாமாதரம் முநிம்

திருவாய்மொழிப்பிள்ளை

நமச் ஸ்ரீசைலநாதார்ய குந்தீநகர ஜந்மநே
ப்ரஸாதலப்த பரமப்ராப்ய கைங்கர்ய சாலிநே

பிள்ளைலோகாசார்யர்

லோகாசார்யாய குரவே க்ருஷ்ண பாதஸ்ய ஸூநவே
ஸம்ஸார போகி ஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நம:

வடக்குத்திருவீதிப்பிள்ளை

ஸ்ரீக்ருஷ்ண பாத பாதாப்ஜே நமாமி சிரஸாஸதா
யத் ப்ரஸாத ப்ரபாவேந ஸர்வ ஸித்திரபூந்மம

நம்பிள்ளை

வேதாந்தவேத்யாம்ருதவாரிராசே:
வேதார்த்தஸாராம்ருதபூரமக்ர்யம்
ஆதாயவர்ஷந்தமஹம்ப்ரபத்யே
காருண்யபூர்ணம்கலிவைரிதாஸம்

நஞ்சீயர்

நமோ வேதாந்த வேத்யாய ஜகந்மங்கள ஹேதவே
யஸ்ய வாக் அம்ருதாஸார பூரிதம் புவநத்ரயம்

பட்டர்

ஸ்ரீபராசர பட்டார்ய: ஸ்ரீரங்கேச புரோஹித:
ஸ்ரீவத்ஸாங்க ஸுத: ஸ்ரீமாந் ச்ரேயஸே மே அஸ்து பூயஸே

எம்பார்

ராமானுஜ பதச்சாயா கோவிந்தாஹ்வாநபாயிநீ
ததாயத்த ஸ்வரூபாஸா ஜீயாந்மத்விச்ரமஸ்தலீ

எம்பெருமானார்

யோநித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணித்ருணாயமேநே
அஸ்மத் குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ
ராமானுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே

பெரியநம்பி

கமலாபதி கல்யாண குணாம்ருத நிஷேவயா
பூர்ண காமாயஸததம்பூர்ணாயமஹதே நம:

ஆளவந்தார்

யத்பதாம்போருஹ த்யான வித்வஸ்தாசேஷ கல்மஷ:
வஸ்துதாமுபயாதோஹம் யாமுநேயம் நமாமிதம்.

மணக்கால்நம்பி

அயத்நதோயாமுநமாத்மதாஸமளர்க்கபத்ரார்ப்பணநிஷ்க்ரியேண
ய:க்ரீதவாநாஸ்திதயௌவராஜ்யம் நமாமிதம்ராமமமேயஸத்வம்

உய்யக்கொண்டார்

நம: பங்கஜ நேத்ராய நாதஸ்ரீபாதபங்கஜே
ந்யஸ்த ஸர்வ பராயாஸ்மத் குலநாதாயதீமதே

நம்மாழ்வார்

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேநமதந்வயாநாம்
ஆத்யஸ்யந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா

சேனைமுதலியார்

ஸ்ரீரங்க சந்த்ரமஸம் இந்திரயாவிஹர்த்தும்
விந்யஸ்ய விச்வ சிதசிந்நயநாதிகாரம்
யோநிர்வஹத்யநிசமங்குலுமுத்ரயைவ
ஸேநாந்யமந்ய விமுகாஸ்தமசிச்ரயாம:

ஸ்ரீரங்கநாச்சியார்

நம: ஸ்ரீரங்கநாயக்யை யத் ப்ரூவிப்ரம பேதந:
ஈசேசிதவ்ய வைஷம்ய நிம்நோந்நதமிதம் ஜகத்

பெரியபெருமாள்

ஸ்ரீஸ்தந ஆபரணம் தேஜ: ஸ்ரீரங்கேசயம் ஆச்ரயே
சிந்தாமணிம் இவ உத்பாந்தம் உத்ஸங்கேநந்த போகிந:

அடுத்து திருப்பள்ளியெழுச்சி – முதல் பாசுரம் கூறவும்:

கதிரவன்  குணதிசைச் சிகரம் வந்து அணைந்தான்,
    கன இருள் அகன்றது காலை அம் பொழுதாய்,
மது விரிந்து ஒழுகின மா மலர் எல்லாம்,
    வானவர் அரசர்கள் வந்து வந்து ஈண்டி
எதிர்திசை நிறைந்தனர், இவரொடும் புகுந்த
    இருங்களிற்று ஈட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுளது எங்கும்,
    அரங்கத்தம்மா. பள்ளி எழுந்தருளாயே.

அடுத்து பின்வரும் திருப்பாவையைக் கூறவேண்டும்:

அங்கண் மா ஞாலத்து அரசர் அபிமான
பங்கமாய் வந்து நின் பள்ளிக்கட்டிற் கீழே
சங்கம் இருப்பார் போல் வந்து தலை பெய்தோம்
கிங்கிணி வாய்ச் செய்த தாமரை பூப் போலே
செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற் போல்
அங்கண் இரண்டும் கொண்டு எங்கள் மேல் நோக்குதியேல்,
எங்கள் மேல் சாபம் இழிந்து ஏலோர் எம்பாவாய்.

நாயகனாய்  நின்ற நந்தபோபனுடைய
கோயில் காப்பானே. கொடித் தோன்றும் தோரண
வாயில் காப்பானே.  மணிக்கதவம் தாள் திறவாய்,
ஆயர் சிறுமியரோமுக்கு அறை பறை
மாயன் மணி வண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான்,
தூயோமாய் வந்தோம், துயிலெழப் பாடிவான்,
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே , அம்மா.
நீ நேய நிலைக் கதவம் நீக்கு – எலோர் எம்பாவாய்

பின்னர் மூன்று முறை கையைத்தட்டி, பெருமாள் பெட்டியைத் திறக்கவும். திரு ஆலவட்டம் ஸமர்ப்பிக்கவும். பின்னர் கீழே உள்ள திருப்பாவையைக் கூறவும்:

மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே நீ பூவைப் பூவண்ணா. உன்
கோயில் நின்று இங்ஙனே போந்தருளி, கோப்பு உடைய
சீரிய சிங்காசனத்து இருந்து, யாம் வந்த
காரியம் ஆராய்ந்து அருள் ஏலோர் எம்பாவாய்

இந்த பாசுரம் மூலம் எம்பெருமானுக்குத் திருத்துழாய் ஸமர்ப்பித்து, அதில் அவன் எழுந்தருள வேண்டும் என்று விண்ணப்பிக்கவும். அப்போது அவன் 10 அடி நடந்ததாக மனதில் எண்ணி, அந்த நடையழகைக் கண்டு வியந்து பின்வரும் திருப்பாவையைக் கூறவும்:

அன்று இவ்வுலகம் அளந்தாய். அடி போற்றி.
சென்று அங்குத் தென்னிலங்கை செற்றாய். திறல் போற்றி.
பொன்றச் சகடம் உதைத்தாய். புகழ் போற்றி.
கன்று குணிலா எறிந்தாய். கழல் போற்றி.
குன்று குடையாய் எடுத்தாய். குணம் போற்றி.
வென்று பகை கொடுக்கும் நின் கையில் வேல் போற்றி.
என்று என்று உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்
இன்று யாம் வந்தோம் இரங்கு ஏலோர் எம்பாவாய்.

அடுத்து கீழே உள்ள ஸ்லோகத்தைக் கூறவும்:


ராமானுஜாங்க்ரி சரணோஸ்மிகுலப்ரதீப
ஸ்த்வாஸீத்ஸயாமுநமுநேஸ்ஸசநாதவம்ச்ய:
வம்ச: பராங்குசமுநேஸ்ஸசஸோபிதேவ்யா:
தாஸஸ்தவேதிவரதாஸ்மிதவேக்ஷணீய:

என்னும் ஸ்லோகத்தைக் கூறி தெண்டன் ஸமர்ப்பித்து, திருமந்திரம், த்வயம், சரமஸ்லோகம் ஆகியவற்றைக் கூறவேண்டும். பின்னர் கீழே உள்ள த்யானஸ்லோகம் கூறவேண்டும்:

கூர்மாதீந் திவ்யலோகாந் ததநுமணிமயம் மண்டபம் தத்ரசேஷம்
தஸ்மிந் தர்மாதிபீடம் ததுபரிகமலம் சாமரக்ராஹிணீச்ச
விஷ்ணும் தேவீர் விபூஷாயுத கணமுரகம் பாதுகேவைநதேயம்
ஸேநேசம் த்வாரபாலாந் குமுதமுககணாந் விஷ்ணுபக்தாந் ப்ரபத்யே.

## 2. வட்டில்களில் தீர்த்தம் சேர்த்தல்

நதர்மநிஷ்டோஸ்மி நசாத்மவேதீநபக்திமாந் த்வச்சரணாரவிந்தே அகிஞ்சநோ நந்யகதிச்சரண்ய த்வத்பாதமூலம் சரணம் ப்ரபத்யே என்று கூறிவிட்டு, வட்டில்களை நன்றாக பரிசோதித்து விட்டு கீழ் கண்ட முறையில் அமைக்கவேண்டும்.




1. அர்க்யம் – திருக்கைகள் விளக்க
2. பாத்யம் – திருவடிகள் விளக்க
3. ஆசமநீயம் – ஸ்வீகரிக்க
4. ஸ்நாநம் – திருமஞ்சனம் செய்ய
5. சுத்தோதகம் – தூய்மைப்படுத்த
6. ஆசார்யனுக்கு – அர்க்யம், பாத்யம், ஆசமநீயம், ஸ்நாந வட்டில்
7. ஆசார்யனுக்கு சுத்தோதக வட்டில்
8. திருக்காவேரி என்னும் சொம்பு
9. படிகப் பாத்திரம்

சொம்பில் உள்ள தீர்த்தத்தில் திருத்துழாய், ஏலக்காய் ஆகியவற்றைச் சேர்த்து, சுரபி முத்திரை காண்பித்து, சொம்பை கையினால் மூடியபடி, 5 முறை – ஸ்ரீமதே நாராயணாய நம: – என்று ஜபிக்கவும்.

சொம்பில் இருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து, அதில் ஒரு திருத்துழாய் இட்டு, ஸ்ரீமதே நாராயணாய என்று ஜபிக்கவும். உத்தரணியில் உள்ள தீர்த்தத்தை, மேலே கூறப்பட்ட மந்த்ரம் கொண்டு ஜபித்தபடி, வட்டில்களில் வரிசையாக ஒரு துளி சேர்க்கவும். பின்னர் சொம்பில் உள்ள தீர்த்தத்தை, அர்க்யவட்டில் தொடங்கிப் ப்ரதக்ஷிணமாக நான்கு வட்டில்களிலும், நடு வட்டிலிலும் சேர்க்கவும். பின்னர் திருத்துழாய், ஏலக்காய்ப்பொடி சேர்க்கவும். தொடர்ந்து, ஐந்து வட்டில்களிலும் ஒவ்வொன்றாகச் சுரபி முத்திரை காட்டி, வலதுகையினால் மூடி, ஸ்ரீமதே நாராயணாய நம: என்று ஐந்து முறை ஜபிக்கவும்.

திருதுழாய்தளத்தைப் பவித்திரவிரலுக்கும் நடுவிரலுக்கும் மத்தியில் இடுக்கிக்கொள்ளவும். பாத்ய வட்டில் தொடங்கி மூன்று வட்டில்களிலும், நடுவட்டிலிலும் கொஞ்சம் கொஞ்சமாய் உத்தரணியால் தீர்த்தம் எடுத்து, அர்க்கிய வட்டிலில் சேர்க்கவும். அர்க்கிய வட்டிலிலிருந்து தீர்த்தத்தை உத்தரணியால் எடுத்து திருத்துழாயுடனே கையினால் உத்தரணியை மூடிக் கொண்டு, முகத்துக்கு நேரே தூக்கிப் பிடித்து – ஸ்ரீவிரஜை, திருக்காவேரி, ஸ்வாமி புஷ்கரணி, அநந்த ஸரஸ், திருத்தாம்பிரபரணி, திருக்கல்யாணி முதலான ஹூற்றெட்டு திவ்ய தேச தீர்த்தங்கள் என்று அதனை நினைத்துக் கொள்ளவும். பின்னர், உத்தரவாக்கியத்தால் ஐந்து தரம் அபி மந்திரித்து, அர்க்கிய வட்டில் தவிர, மற்ற நான்கு வட்டில்களிலும், சொம்பிலும் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சேர்த்து, மீதத்தைத் திருத்துழாயாலே பெருமாள் முதலியவர்கள், ஆசார்யர், சந்நிதிபரிகரங்கள் மீதும், தன் மீதும் புரோக்ஷித்து, மிகுந்த தீர்த்தத்தைப் படிகத்தில் சேர்த்துவிடவும்.

## ஆசார்யனுக்குத் திருவாராதனம் சமர்ப்பித்தல்

சொம்பிலிருந்து தீர்த்தத்தை உத்தரணியால் எடுத்து, உத்தரவாக்கியத்தாலே வேறே இருக்கிற (படத்தில் உள்ள ஆசார்யனுக்கான வட்டில்) இரண்டு வட்டில்களைச் சோதித்துப் படிகத்தில் சேர்த்துவிடவும். மேற்படி சொம்பு தீர்த்தத்தை அவ்விரண்டு வட்டில்களிலும் சேர்க்கவும். அவற்றில் திருத்துழாயைச் சேர்த்து, சுரபிமுத்திரை காட்டவும் (கீழே படத்தில் உள்ளது).

ஒவ்வொரு வட்டிலையும் வலது கையினால் மூடிக்கொண்டு, ஐந்து தரம் உத்தரவாக்கியத்தால் அபிமந்திரித்து, ஒரு வட்டிலில் உத்தரணியால் தீர்த்தம் எடுத்து – அஸ்மத்குருப்யோ நம: அர்க்கியம் கண்டருளாய் – என்று அனுசந்தித்துக்கொண்டே, ஆசார்யர் திருமுன்புகாட்டிப் படிகத்தில் சேர்த்துவிடவும். இரண்டாந்தரமும் மூன்றாந்தரமும் அப்படியே அவ்வட்டில் தீர்த்தத்தையே உத்தரணியால் எடுத்து, ஆசார்யர் திருமுன்பு காட்டி, படிகத்தில் சேர்த்துவிடவும். வேறே வட்டிலில் இருக்கும் சுத்தோதகத்தினால் உத்தரணியைச் சோதித்துப் படிகத்தில் சேர்த்துவிட்டு, அந்த அர்க்கியவட்டிலில் தானே உத்தரணியால் தீர்த்தம் எடுத்து – அஸ்மத்குருப்யோ நம: பாத்திய கண்டருளாய் – என்று முன் போலவே மும்மூன்றுதரம் ஆசார்யர் திருவடிகளுக்குக் காட்டிப் படிகத்தில் சேர்த்து விடவும். வேறே வட்டிலில் இருக்கும் சுத்தோதகத்தினால் உத்தரணியைச் சோதித்துப் படிகத்தில் சேர்த்துவிடவும். மறுபடியும் அவ்வட்டிலில் உத்தரணியால் தீர்த்தம் எடுத்து ஆசார்யன் திருகைகளை விளக்கும்படி காட்டவேண்டும். அடுத்து, அர்க்ய பாத்திரத்திலிருந்து மூன்றுதரம் கண்டூஷம் சமர்ப்பித்து (கண்டூஷம் = வாய்க்கொப்பளித்தல்), உத்தரணியைச் சுத்தோதகத்தினால் சோதிக்கவும். மறுபடியும் அவ்வட்டிலில் உத்தரணியால் தீர்த்தம் எடுத்து – அஸ்மத்குருப்யோ நம: ஆசமநீயம் கண்டருளாய் – என்று மும்மூன்றுதரம் ஆசார்யர் திருப்பவளத்துக்குக் காட்டிப் படிகத்தில் சேர்த்து விடவும். சுத்தோதகத்தினால் உத்தரணியைச் சோதித்துப் படிக்கத்தில் சேர்த்து விடவும். அஸ்மத் குருப்யோ நம: என்று திருத்துழாய் கொண்டு திருவொற்றாடை ஸமர்ப்பிக்கவும்.

ஸ்நானாசனத்தில் எழுத்தருளச் செய்ய – அஸ்மத் குருப்யோ நம: என்று திருத்துழாய் சமர்ப்பித்து, வெண்ணெயளைந்த என்னும் பத்துப் பாசுரங்களையும் சேவிக்கவும். அதற்கு நேரம் இல்லை என்றால் கீழே உள்ள அந்தத் திருமொழியின் முதல் மற்றும் கடைசிப் பாசுரங்களையாவது சேவிக்கவும்:

வெண்ணெய் அளைந்த குணுங்கும்
விளையாடு புழுதியும் கொண்டு
திண்ணென இவ் இரா உன்னைத்
தேய்த்துக் கிடக்க நான் ஒட்டேன்
எண்ணெய்ப் புளிப்பழம் கொண்டு இங்கு
எத்தனை போதும் இருந்தேன்
நண்ணல் அரிய பிரானே
நாரணா நீராட வாராய்

கார் மலி மேனி நிறத்துக் கண்ண பிரானை உகந்து
வார் மலி கொங்கை யசோதை மஞ்சனம் ஆட்டிய ஆற்றைப்
பார் மலி தொல் புதுவைக் கோன் பட்டர் பிரான் சொன்ன பாடல்
சீர் மலி செந்தமிழ் வல்லார் தீவினை யாதும் இலரே.

பின்னர், அர்க்ய வட்டிலிலிருக்கும் தீர்த்தத்தை உத்தரணியால் எடுத்து – அஸ்மத் குருப்யோ நம: நீராட்டம் கண்டருளாய் என்று திருத்துழாய் தளத்தைக் கொண்டு ஆசார்யனுக்குப் புரோக்ஷித்துத் திருமஞ்சனமும், திருவொற்றாடையும் ஸமர்ப்பிக்கவும்.

அலங்காராஸனத்தில் எழுந்தருளச் செய்ய – அஸ்மத் குருப்யோ நம: – என்று திருத்துழாய் ஸமர்ப்பித்துத் திருப்பரிவட்டமாகப் பாவித்து – அஸ்மத் குருப்யோ நம: – என்று திருத்துழாய் ஸமர்ப்பிக்கவும். பின்னர் கீழே உள்ள பாசுரம் ஸேவிக்கவும்:

வகையால் மனம் ஒன்றி மாதவனை நாளும்
புகையால் விளக்கால் புது மலரால் நீரால்
திசை தோறு அமரர்கள் சென்று இறைஞ்ச நின்ற
தகையான் சரணம் தமர்கட்கு ஓர் பற்றே

என்று கூறியபடியே – அஸ்மத் குருப்யோ நம: என்று தூபம் காட்ட வேண்டும். தொடர்ந்து அர்க்கிய–பாத்ய–ஆசமநீயம் சேர்க்கவேண்டும் (மேலே கூறிய முறைகளின்படி). பிறகு திரு ஒற்றாடைய் காண்பிக்கவும். பின்னர் கீழே உள்ள பாசுரம் ஸேவிக்கவும்:

கேசவன் தமை கீழ் மேல் எமர் ஏழ் ஏழு பிறப்பும்
மா சதிர் இது பெற்று நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா
ஈசன் என் கருமாணிக்கம் என் செங்கோலக் கண்ணன் விண்ணோர்
நாயகன் எம் பிரான் எம்மான் நாராயணனாலே

என்று கூறியபடி திருமண்காப்பாகத் திருத்துழாய் சேர்க்கவேண்டும். அடுத்து கீழே உள்ள பாசுரம் ஸேவிக்கவும்:

பூசும் சாந்து என் நெஞ்சமே
புனையும் கண்ணி எனதுடைய
வாசகம் செய் மாலையே
வான்பட்டு ஆடையும் அஃதே
தேசம் ஆன அணிகலனும்
என் கைகூப்புச் செய்கையே
ஈசன் ஞாலம் உண்டு உமிழ்ந்த
எந்தை ஏக மூர்த்திக்கே

என்னும் பாசுரத்தால் சாத்துப்படி, புஷ்பம், திருவாபரணமாக திருத்துழாயும் சேர்க்கவேண்டும். அடுத்து கீழே உள்ள பாசுரம் ஸேவிக்கவும்:

பரிவது இல் ஈசனைப் பாடி
விரிவது மேவல் உறுவீர்
பிரிவகை இன்றி நல் நீர் தூய்
புரிவதுவும் புகை பூவே

என்கிற பாசுரத்தால் தூபம் காண்பிக்கவும். தொடர்ந்து பின்வரும் பாசுரம் ஸேவிக்கவும்:

வையம் தகளியா வார் கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக செய்ய
சுடர் ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல் மாலை
இடர் ஆழி நீங்குகவே என்று

என்கிற பாசுரத்தால் தீபம் காண்பிக்கவும். தொடர்ந்து கீழே உள்ள பாசுரம் ஸேவிக்கவும்:

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
  பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா
  உன் செவ்வடி செவ்வி திருக்காப்பு

என்கிற பாசுரத்தால் கற்பூரம் காண்பிக்கவும். பிறகு அர்க்கிய பாத்ய ஆசமனீயம் ஸமர்ப்பிக்கவும். திருவொற்றாடை ஸமர்ப்பிக்கவும். தொடர்ந்து கீழே உள்ள பாசுரம் ஸேவிக்கவும்:

சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள் கடலுள் என்றும்
புணையாம் மணி விளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற்கு அரவு

என்கிற பாசுரத்தால் மந்திர புஷ்பமாகத் திருத்துழாய் ஸமர்ப்பிக்கவும்.

ஆசார்யர் ஸ்ரீஹஸ்தத்தால் திருவாராதனம் ஸமர்ப்பிப்பதாகப் பாவித்து, ஸ்வாசார்யருக்குச் சமர்ப்பித்த இரண்டு வட்டில்களிலுள்ள தீர்த்தத்தைப் படிகத்தில் சேர்க்கவும். சொம்பிலிருக்கும் தீர்த்தத்தினாலே முன் போல வட்டில்களைச் சோதித்து, தீர்த்தம் நிரப்பவும். ஸ்வாசார்யருக்குச் சமர்ப்பித்தபடியே – அஸ்மத்குருப்யோ நம: – என்னும் வாக்கியத்திற்குப் பதிலாக – பராங்குச பரகால யதிவராதிப்யோன் ணம: – என்று அனுசந்தித்து, ஆழ்வாராசார்யர்களுக்குத் திருவாராதனம் சமர்ப்பிக்கவேண்டும்.

ஆசார்யர் ஸ்ரீஹஸ்தத்தால் திருவாராதனம் ஸமர்ப்பிப்பதாகப் பாவித்து, ஐந்து வட்டில்களுள், அர்க்கிய வட்டிலிலிருக்கும் தீர்த்தத்தை உத்தரணியில் கொண்டு – ஸர்வமங்களவிக்ரஹாய, ஸமஸ்தபரிவாராய, ஸ்ரீமதே நாராயணாய நம: – என்று மூன்று தரம் அர்க்யம் சமர்ப்பிக்கவும். நடுவட்டிலிலிருக்கும் சுத்தோதகத்தினால் உத்தரணியைச் சோதித்துப் படிகத்தில் சேர்த்துவிடவும். பாத்ய வட்டிலிலிருக்குன்ம் தீர்த்தத்தால் மூன்று தரம் பாத்யம் ஸமர்ப்பிக்கவும். மேற்படி சுத்தோதகத்தினால் உத்தரணியைச் சோதித்துப் படிகத்தில் சேர்த்துவிடவும். மறுபடியும் அர்க்ய பாத்திரத்தில் தீர்த்தம் எடுத்து, திருத்துழாய்கொண்டு எம்பெருமான் திருக்கைகளை விளக்கி, அந்தப் பாத்திரத்திலிருந்தே மூன்று தரம் கண்டுச்ஷம் ஸமர்ப்பிக்கவும். உத்தரணியை சுத்தோதகத்தால் சோதித்து, ஆசமனீய வட்டிலிலுருக்கும் தீர்த்தத்தினால் மூன்று தரம் ஆசமன்னீயம் ஸமர்ப்பிக்கவும். சுத்தோதகத்தினால் உத்தரணியைச் சோதித்துப் படிகத்தில் சேர்த்துவிடவும். திரு ஒற்றாடை ஸமர்ப்பிக்கவும். பிறகு ஸ்நானாசனத்தில் எழுந்தருளச்செய்யவும். அர்க்கிய–பாத்ய–ஆசமனீயம், திருவொற்றாடை ஸமர்ப்பிக்கவும். ஒரு திருத்துழாயாலே திருமுத்து (பற்கள்) விளக்கியருளப் பண்ணவும். மற்றொரு திருத்துழாயாலே திருநாவு வழிக்கவும். அர்க்ய பாத்திரத்திலிருந்து மூன்று தரம் அர்க்யம் ஸமர்ப்பிக்கவும். பாத்யம்–ஆசமனீயம் ஸமர்ப்பிக்கவும். சுருளமுது கண்டருளப் பண்ணவும். ஸ்நாநபாத்திரத்தில், மேலே கூறப்பட்ட வெண்ணெய் அளைந்த குணுங்காலே – என்னும் பாசுரம் மூலம் திருமஞ்சனம் செய்யவும். பிறகு திருவொற்றாடையும் ஸமர்ப்பிக்கவும். அலங்காராசனத்தில் எழுந்தருளச்செய்யவும். முன்போலவே திருப்பரிவட்டமும், தூபமும், அர்க்ய–பாத்ய–ஆசமனீயமும், திருவொற்றாடையும், திருமண்காப்பு, சாத்துப்படி, புஷ்பம், திருவாபரணம், தூபம், தீபம், கற்பூரம், அர்க்ய–பாத்ய–ஆசமனீயம், திருவொற்றாடை, மந்திரபுஷ்பம் முதலியவற்றை, இதே வரிசையில் ஸமர்ப்பிக்கவும். எம்பெருமானே ஸகல அபசாரங்களையும் பொறுத்தருளி, ஸமஸ்த உபசாரங்களையும் திருவுள்ளம் பற்றியருள வேண்டும் என்று திருவடிகளில் திருத்துழாய் ஸமர்ப்பிக்கவும்.

## திவ்யப்ரப்ந்தம் சேவித்தல்

1. குருமுகம் என்று தொடங்கும் தனியன் முதலாக திருப்பல்லாண்டு.
2. கண்ணி நுண் சிறுத்தாம்பு

# பிரஸாதம் கண்டருளப் பண்ணுதல்

போஜ்யாஸனத்தில் எழுந்தருளச்செய்ய – ஸர்வமங்கள விக்ரஹாய ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே நாராயணாய நம: – என்று திருத்துழாய் சமர்ப்பித்து, ஐந்து வட்டில்களில் இருக்கும் தீர்த்தத்தைக் கொண்டு, மேற்படி வாக்கியங்களினால் அர்க்ய–பாத்ய–ஆசமநீயமும், திருவொற்றாடையும் ஸமர்ப்பிக்கவும். அர்க்ய வட்டிலிலுருக்கும் தீர்த்தத்தை உத்தரணியினால் திருததுழாய்த்தளத்தைக் கொண்டு உத்தரவாக்யத்தால் புரோக்ஷித்து ஸ்தல சுத்தி செய்யவும்.

தளிகை ஸமர்ப்பித்து, அர்க்ய வட்டிலிலிருந்து உத்தரணியால் தீர்த்தத்தை எடுத்து, உத்தரவாக்கியத்தால் திருத்துழாய்த்தளத்தைக் கொண்டு, மேற்படி தளிகை முதலியவற்றுக்குப் புரோக்ஷித்து, திருதுழாயையும் தளிகையில் சேர்க்கவும். சுரபிமுத்திரைக் காட்டவும். பிரஸாதத்தின் பேரில் கையை வைத்துக் கொண்டு, உத்தரவாக்கியத்தால் அபிமந்திரித்து, உத்தரணியால் தீர்த்தத்தை இரண்டு தரம் பிரதக்ஷிணமாக உத்தர வாக்யம் கூறியபடி, தளிகையைச் சுற்றவும். கீழே உள்ள பாசுரங்கள் ஸேவிக்கவும்:

நாறு நறும் பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்கு நான்
நூறு தடாவில் வெண்ணெய் வாய் நேர்ந்து பராவி வைத்தேன்
நூறு தடா நிறைந்த அக்கார அடிசில் சொன்னேன்
ஏறு திருவுடையான் இன்று வந்து இவை கொள்ளுங்கொலோ

இன்று வந்து இத்தனையும் அமுது செய்திடப் பெறில் நான்
ஒன்று நூறாயிரமாகக் கொடுத்துப் பின்னும் ஆளும் செய்வன்
தென்றல் மணம் கமழும் திருமாலிருஞ்சோலை தன்னுள்
நின்ற பிரான் அடியேன் மனத்தே வந்து நேர்படிலே

கூடாரை வெல்லும் சீர்க்கோவிந்தா உந்தன்னைப்
பாடிப் பறை கொண்டு யாம் பெறும் சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள் வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாம் அணிவோம்
ஆடை உடுப்போம் அதன் பின்னே பாற் சோறு
மூட நெய் பெய்து முழங்கை வழி வாரக்
கூடி இருந்து குளிர்ந்து ஏலோர் எம்பாவாய்.

என்கிற பாசுரங்கள் சேவிக்கிறவரையில், உத்தரணியுடனே கைக்காட்டிக் கொண்டிருக்கவும்.பாசுரங்களைச் சேவித்து – ஸர்வமங்கள விக்ரஹாய, ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே நாராயணாய நம: – என்று பெருமாள் முதலானவர்களுக்குப் பிரசாதமும் தீர்த்தமும் கண்டருளச் செய்யவும். அர்க்ய–பாத்ய–ஆசமநீயமும், திருவொற்றாடையும் ஸமர்ப்பிக்கவும்.

பின்பு – பராங்குச பரகால யதிவராதிப்யோ நம: – என்று போஜ்யாஸனத்தில் எழுந்தருளவைத்து, மேற்படி ஐந்து வட்டில்களிலுள்ள தீர்த்தத்தினாலேயே அர்க்ய–பாத்ய–ஆசமநீயம் சமர்ப்பிக்கவும். மேற்படி பாசுரங்களைச் சேவித்து – பராங்குச பரகால யதிவராதிப்யோ நம: – என்று நம்மாழ்வார் முதலிய பூர்வாசார்யர்களுக்கு அப்பிரசாதமும் தீர்த்தமும் கண்டருளச் செய்யவும். அர்க்ய–பாத்ய–ஆசமநீயமும், திருவொற்றாடை ஸமர்ப்பிக்கவும்.

அஸ்மத்குருப்யோ நம: – என்று போஜ்யாஸனத்தில் எழுந்தருளவைத்து, மேற்படி ஐந்து வட்டில்களிலுள்ள தீர்த்தத்தினாலேயே அர்க்ய–பாத்ய–ஆசமநீயம் சமர்ப்பிக்கவும். மேற்படி பாசுரங்களைச் சேவித்து – அஸ்மத் குருப்யோ நம: – என்று ஸ்வாசார்யருக்கு அந்தப் பிரசாதமும் தீர்த்தமும் கண்டருளச் செய்யவும். தளிகையை மாற்றிவிட்டு – ஸ்ரீமதே நாராயணாய நம: – என்று ஸ்தல சுத்தி செய்யவும்.

## அடைக்காயமுது செய்வித்தல் (அடைக்காய் என்றால் வெற்றிலை–பாக்கு)

பர்யங்காஸனத்தில் எழுந்தருளச்செய்ய – ஸர்வமங்கள விக்ரஹாய, ஸமஸ்த பரிவாராய, ஸ்ரீமதே நாராயணாய நம: – என்று திருத்துழாய் ஸமர்ப்பிக்கவும். சொம்பிலிருக்கும் தீர்த்தத்தை உத்தரணியால் மேற்படி வாக்யங்களைக் கூறிவிட்டு, அர்க்ய–பாதய–ஆசமநீயமும் திருவொற்றாடையும் சமர்ப்பிக்கவும். மேற்படி சொப்பிலிருக்கும் தீர்த்தத்தை உத்தரணியால் எடுத்து, உத்தரவாக்யத்தால் திருத்துழாய்த்தளத்தைக் கொண்டு அடைக்காய்க்குப் புரோக்ஷிக்கவும். அதில் திருத்துழாயும் சேர்த்து, கீழே உள்ள பாசுரத்தையும் மேற்படி வாக்யங்களையும் அனுசந்தித்துப் பெருமாள் முதலானவர்களுக்கு அடைக்காயமுது செய்விக்கவும்:

போய்ப்பாடு உடைய நின் தந்தையும் தாழ்த்தான்
    பொரு திறள் கஞ்சன் கடியன்
காப்பாரும் இல்லை கடல்வண்ணா உன்னை
    தனியே போய் எங்கும் திரிதி
பேய்ப்பால் முலை உண்ட பித்தனே கேசவ
    நம்பீ உன்னைக் காது குத்த
ஆய்ப்பாலர் பெண்டுகள் எல்லாரும் வந்தார்
    அடைக்காய் திருத்தி நான் வைத்தேன்.

தொடர்ந்து அர்க்ய–பாத்ய–ஆசமநீயமும், திருவொற்றாடையும் சமர்ப்பிக்கவும். பராங்குச பரகால யதிவராதிப்யோ நம: – என்று பர்யங்காஸனத்தில் எழுந்தருளவைத்து, நம்மாழ்வார் முதலிய பூர்வாசார்யர்களுக்கு சொம்பிலிருக்கும் தீர்த்தத்தினால் அர்க்ய–பாத்ய–ஆசமநீயமும் திருவொற்றாடையும் ஸமர்ப்பிக்கவும். அஸ்மத் குருப்யோ நம: – என்று பர்யங்காஸனத்தில் எழுந்தருளச் செய்யவும். ஸ்வாசார்யருக்கு அந்தச் சொம்பிலிருக்கும் தீர்த்தத்தினாலேயே அர்க்ய–பாத்ய–ஆசமநீயமும், திருவொற்றாடையும் ஸமர்ப்பிக்கவும். அடைக்காயமுது செய்விக்கவும். பின்பு அர்க்ய–பாத்ய–ஆசமநீயமும், திருவொற்றாடையும் ஸமர்ப்பிக்கவும். திருப்பல்லாண்டினால் கற்பூரம் சமர்ப்பிக்கவும்.

## சாத்து

கீழே உள்ள பாசுரங்களைச் சேவிக்கவும்:

சிற்றஞ் சிறு காலே வந்து உன்னை சேவித்து, உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்று – ஏலோ எம்பாவாய்.

வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை
திங்கள் திருமுகத்துச் சேய் இழையார் சென்று இறைஞ்சி
அங்கப் பறை கொண்ட ஆற்றை அணி புதுவைப்
பைங்கமலத் தண் தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கு இப்பரிசுரைப்பார் ஈர் இரண்டு மால் வரைத் தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்.

இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம்
    மாலிருஞ்சோலை என்னும்
பொருப்பிடம் மாயனுக்கு என்பர்
    நல்லோர் அவை தம்மொடும் வந்து
இருப்பிடம் இராமானுசன் மனத்து
    இன்று அவன் வந்து

இருப்பிடம் என் தன் இதயத்துள்ளே
    தனக்கு இன்புறவே.

இன்புற்ற சீலத்து இராமானுச
    என்றும் எவ்விடத்தும்
என்புற்ற நோய் உடல்தோறும் பிறந்து
    இறந்து எண் அரிய
துன்புற்று வீயினும் சொல்லொவது ஒன்றுண்டு
    உன் தொண்டர்க்கட்கே
அன்புற்று இருக்கும்படி என்னை ஆக்கி
    அங்கு ஆட்படுத்தே.

அங்கயல் பாய் வயல் தென்னரங்கன் அணி ஆக மன்னும்
பங்கய மா மலர்ப் பாவையைப் போற்றுதும் பத்தி எல்லாம்
தங்கியது என்னத் தழைத்து நெஞ்சே நம் தலைமிசையே
பொங்கிய கீர்த்தி இராமானுசன் அடிப் பூ மன்னவே.

பூமன்னு மாது பொருந்திய மார்பன் புகழ் மலிந்த
பா மன்னு மாறன் அடி பணிந்து உய்ந்தவன் பல் கலையோர்
தாம் மன்ன வந்த இராமானுசன் சரணாரவிந்தம்
நாம் மன்னி வாழ நெஞ்சே சொல்லுவோம் அவன் நாமங்களே.

என்கிற பாசுரங்களைச் சேவித்து கொண்டே திருத்துழாயும், திருப்பல்லாண்டினால் கற்பூரமும் ஸமர்ப்பிக்கவும். தொடர்ந்து அஞ்ஜலி செய்தபடி கீழே உள்ள வாக்கியங்களைக் கூறவும்:

ஸர்வ தேச தஸாகாலே ஷ்வவ்யாஹத பராக்ரமா
ராமானுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்

ராமானுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதிவாஸர முஜ்வலா
திகந்தவ்யாபிநீ பூயாத் ஸாஹி லோக ஹிதைஷிணீ

ஸ்ரீமந். ஸ்ரீரங்க ஸ்ரீயமனுபத்ரவா மனுதிநம் ஸம்வர்த்தய
ஸ்ரீமந். ஸ்ரீரங்க ஸ்ரீயமனுபத்ரவா மனுதிநம் ஸம்வர்த்தய

நமோ ராமானுஜார்யாய வேதாந்தார்த்த பரதாயிநே
ஆத்ரேய பத்மநாபார்ய ஸுதாய குணசாலிநே

தொடர்ந்து வாழித் திருநாமங்கள் கூறவும்.

## திருக்காப்பு சேர்த்தல்

ஸையாஸனத்தில் எழுந்தருளச்செய்ய உத்தரவாக்யத்தால் திருத்துழாய் ஸமர்ப்பித்துத் திருக்காப்புச் சேர்த்துத் தண்டன் ஸமர்ப்பிக்கவும்.

## பிரஸாதம் ஸ்வீகரித்தல்.

படிகத்திலிருக்கிற தீர்த்தமும் திருத்துழாயும் உத்தரவாக்யத்தால் ஸ்வீகரித்து, பின்பு எம்பெருமான் முதலானவர்களுக்குக் கண்டருளப் பண்ணின சேஷத்தை – அஸ்மத் குருப்யோ நம: – என்று ஆசார்யர் தனியனை அனுசந்தித்து ஸ்வீகரிக்கவேண்டும்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்
ஸர்வம் க்ருஷ்ணார்ப்பணம்